1938-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 13-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை சென்னை ஒற்றைவாடைக் கொட்டகையில் கூடிய சென்னைத் தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாட்டில் வரவேற்புக் கழகத் தலைவியார்

திரு வ. பா. தாமரைக்கண்ணி

நிகழ்த்திய வரவேற்புரை

"வஞ்சியீர் வஞ்சியிடையீர் மறவேலான்
பஞ்சடி ஆயத்தீர் எல்லீரும் வம்மெல்லாம்
கொங்கையால் கூடல் பதிசிதைத்துக் கோவேந்தைச்
செஞ்சிலம்பால் வென்றாளைப் பாடுதும் வம்மெல்லாம்
தென்னவன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்."

என் அருமைத் தாய்மார்களே,

ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்குமுன் கண்ணகி என்னும் வீரத் தமிழ்ப்பெண் தனக்குத் தீங்கிழைத்த பாண்டிய அரசனையும் அவனது நகரத்தையும் தனது கற்பின் ஆற்றலால் அழித்துச் சோக மளாவிய முகத்தினளாய் வஞ்சிநாடு புகுந்தாள். அங்ஙனம் புகுந்த பத்தினிக் கடவுளைத் தொழுவதற்காக வஞ்சிமகளிர் தம் இனத்தவரைக் கூவியழைத்த பாட்டுதான் நான் மேலே எடுத்துக்காட்டிய சிலப்பதிகாரப் பாட்டு. அதுபோல இன்று நம்மிடை ஒரு பெண் அடைக்கலம் புகுந்திருக்கிறாள். அவள் நம்மை யெல்லாம் பெற்ற தாய். நான் மேலெடுத்துக்காட்டிய கண்ணகிக்கும் அவள்தான் தாய். இவ்வுலகத்துக்கே அவள்தான் முதல் தாய் என்று சொன்னாலும் குற்றமாகாது. இவ்வளவு வயது நிரம்பியும் அவள் தனது இளங் கன்னிக்கோலம் மாறாதிருக்கிறாள். ஆனால் அவளது கலை உரியப்பட்டிருக்கிறது. அவளது செம்பொன்போன்ற திருமேனியில் அம்மைத் தழும்புகளும் காயவடுக்களும் காணப்படுகின்றன. அவள் முகத்தில் அவலக்குறி தோன்றுகிறது. அவளது திருக் கரங்களில் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. தாயாகிய அவளைக் காப்பது மக்

களாகிய நமது கடமை யல்லவா? ஏற்கெனவே அவள் தனது பகைவர்மேல் சிறிது வெற்றி பெற்றிருக்கிறாள். சென்ற திங்களில் சென்னை, திருச்சினாப்பள்ளி முதலிய இடங்களில் நடந்த நகர சபைத் தேர்தல்களின் முடிவினால் அவளுடைய ஒரு கை விலங்கு உடைத் தெறியப்பட்டது. ஆனால் மற்றொரு கையில் விலங்கு பூட்டப்பட்டபடியே இருக்கிறது. அம்மற்றொரு விலங்கையும் களைந்தெறியவும், அவளுடைய கலையைச் சீர்திருத்தி அவளுக்கு ஒப்பனை செய்யவும், உடம்பிலுள்ள மாசைத் துடைக்கவும், அன்னைமீர், விரைந்து வம்மின்! இன்று இங்கே கூடும் சென்னைத் தமிழ்நாட்டுப் பெண்கள் மகாநாட்டுக்குப் போந்த உங்களை மிகவும் ஆர்வத்துடன் வரவேற்கிறேன். எங்கள் அழைப்புக் கிணங்கி, உங்களுக்குள்ள பல வேலைகளையும் விட்டு விட்டு இங்கே வந்ததற்கு உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். எங்களது ஆற்றலுக்கும் பொருள் நிலைமைக்கும் தக்கவாறு நீங்கள் இன்று இங்கே தங்கியிருப்பதற்கு எல்லாவிதமான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. எங்களையும் மீறிக் குற்றம் குறைகளிருப்பின் பொறுத்தருள்க.

என் கடன்.

ஒன்றுக்கும் பற்றாத என்னை இம்மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவியாகத் தேர்ந்தெடுத்தமைக்காக இம்மகா நாட்டினருக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்குரிய பணியை நிறைவேற்றி உங்களை வரவேற்கு முகத்தான் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன். செவி சாய்த்தருள்க.

வீணையை இழைத்த விரலைக் காணோம்.

என் பணியை ஆற்றத் தொடங்குமுன், சென்ற திங்களில் தம் பருவுடல் நீத்த வீணை தனம்மாள் அவர்களின் பிரிவால் தமிழ்நாடு அடைந்த நஷ்டத்தைப்பற்றிக் குறிப்பிடாமற் போனால் நான் என் கடமையினின்றும் தவறினவளாவேன். வீணை மிழற்றுவதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி வீணையையே தனது கொடியின் அடையாளமாகக் கொண்டிருந்த இராவணனைப்பற்றியும், வன விலங்குகளும் பறவைகளும் கருத்தழிந்து மனமுருகி நிற்குமாறு

யாழ் இசைக்கும் திறமை பெற்றிருந்த உதயணன், காந்தருவதத்தை மாதவி முதலியவர்களைப் பற்றியும் நாம் பண்டைய இலக்கியங்களில் படித்திருக்கிறோம். அவர்களை நாம் நேரில் கண்டதில்லை. ஒருவேளை அவர்களெல்லாம் இப்படித்தான் வாசித்திருப்பார்களோ வென்று நாம் எண்ணும்படியாகத் தமது திறமையினால் நமது கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்து, இசையுலகில் தமக்கு ஈடு மற்றொருவரின்றிச் சிகரமாய் விளங்கிய தனம்மாளை இனிமேல் நாம் பார்க்கமுடியாது. அவரது வீணையினின்று எழும்பும் இனிய ஓசையினையும் கேட்கமுடியாது. அவரது பிரிவால் தமிழ்நாடு அடைந்த நஷ்டம் ஈடுசெய்ய முடியாததாகும். ஒரோவொருகால் அவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இசைக்கலையின் வெவ்வேறு அம்சங்களில் திறமை பெற்றிருப்பதைக் கண்டு மகிழ்வெய்துகிறோம். ஆனால் அதே சமயத்தில், அத்திறமைக்கெல்லாம் மூலதனம் போய் விட்டதே என்று நினைக்கும்போது நம்மை யறியாமல் நமக்கெல்லாம் சோர்வுண்டாகிறது. அவருடைய குடும்பத்தாருக்கும், தன் மேல் நடனமாடித் தன்னிடமிருந்து இன்னிசை எழுப்பிய விரல்களை இழந்து சோர்வுற்றுக் கிடக்கும் அவருடைய வீணைக்கும் நம் மகாநாட்டின் சார்பாக என் மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சரித்திரப் பிரசித்திபெற்றது.

என் அருமைச் சகோதரிகளே, நாம் இன்று கூடியுள்ள மகாநாட்டைப்போல் தமிழ்நாட்டு வரலாற்றில் இதற்குமுன் வேறு எப்போதும் கூடியதில்லையென்று துணிந்து கூறுவேன். இம்மகாநாட்டைக் கூட்டியதன் நோக்கம் இன்னதென்று நான் உங்களுக்கு விரிவாகக் கூறவேண்டியதில்லை. அதைத் தெரிந்தே நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள். சுருங்கச் சொன்னால், தமிழர் சமூகம் அடியோடு மாண்டுபோகாமல் காப்பதற்காகத் தமிழர்களை அவர்களுடைய பேருறக்கத்தினின்றும் சிறிது தட்டியெழுப்புவதில் நம்மாலான உதவியைச் செய்வதுதான் இம்மகாநாட்டின் நோக்கமாகும். தற்போதைய தமிழர்களின் சீர்கேடுற்ற நிலைமையை ஒரே வாக்கியத்தில் கூறவேண்டுமானால், "தமிழர்கள் தங்களது சொந்த நாட்டில் உரிமை உணர்ச்சியுடன் தலைநிமிர்ந்து நடக்கமுடியாத நிலைமையிலிருக்

கிறார்கள்" என்று சொல்லலாம். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. நாலா பக்கத்திலிருந்தும் அவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். கண்டபேர்களுக்கெல்லாம் அவர்கள் அடிமையாகிறார்கள். இதற்கெல்லாம் காரணம்

தாய்க் கொலை செய்த பாவம்.

தமிழர்கள் என்று தங்கள் தாய்மொழியாகிய தமிழைப் போற்றாமல் விட்டார்களோ அன்றே அவர்களுக்கு அடிமைத் தளை பூட்டப்பட்டது. தங்களுடைய பண்டைப் பெருமைகளை அவர்கள் மறந்துவிட்டார்கள். தங்களுக்கேயுரிய கலை, பண்பு, நாகரிகம் முதலியவைகளை அறவே கைந் நழுவவிட்டுத் தமக்கு எவ்வாற்றானும் ஒவ்வாத பிறநாட்டுப் பழக்க வழக்கங்களை மேற்கொண்டு இன்னலுறுகின்றனர். தமிழ்ச் சான்றோர்களையும் அவர்கள் இயற்றும் நூல்களையும் தமிழர்கள் பாராட்டுவதில்லை. தங்கள் முன்னேற்றத்தைக் கருதி நடத்தப்படும் இயக்கங்களுக்கு ஆதரவளிக்காமல், தங்களுடைய அடிமை விலங்கைப் பின்னும் இறுக்குவதற்காக மாற்றார் செய்யும் வஞ்சனைச் சூழ்ச்சிகளில் சிக்கி அம்மாற்றாருக்குப் பொருளுதவி செய்கிறார்கள். நம்முடைய இந்தப் பரிதாபகரமான நிலைமையை,

"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப்
பான்மைகெட்டு'
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு-வாழ்ந்திடுதல் நன்றோ
சொல்லீர்" எனவும்,
'. ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்"
எனவும்

காலஞ்சென்ற கவி சுப்பிரமணிய பாரதியார் நன்கு விளக்கிக் காட்டுகிறாரல்லவா?

தமிழ் முன்னால், சுயராஜ்ஜியம் பின்னால்.

இத்தகைய நிலைமையிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டுமானால், நமது தமிழ்த் தாயை அவளது பண்டைய அரியாசனத்தில் ஏற்றவேண்டும். தமிழ்த் தாயை இழந்து நாம் வாழ்வது வாழ்வாகுமா? அன்றி வாழத்தான் முடியுமா? "இந்திய நாட்டின்

ஒற்றுமையையும் சுயராஜ்ஜியத்தையும் முன்னிட்டு, நான் தமிழ் மொழியைச் சற்று தியாகம்செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்று ஒரு தமிழ்ப் பெரியார் சொன்னாராம். அது அவசிய மில்லை என்று நான் அவருக்கு வணக்கமாய்த் தெரிவித்துக் கொள் வதோடுகூட, இதை வேறு பல தமிழ்ச் சான்றோர்களும் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். இந்திய நாட்டுக்கு ஒரு பொது மொழி இல்லா மலேயே அது ஒற்றுமைப்படும் என்னும் உண்மையை,

"முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட் டுடையாள், எனில்
சிந்தனை ஒன்றுடையாள்"

என்னும் பாரதியாருடைய பாட்டு நிரூபித்துக் காட்டுகிறது. அப்படி யின்றி, ஒருவேளை ஷை தமிழ்ப் பெரியாரின் கொள்கையின்படித் தமிழைப் பறிகொடுத்துத்தான் சுயராஜ்ஜியம் பெறவேண்டுமானால், அத்தகைய சுயராஜ்ஜியம் நமக்கு வேண்டியதில்லை. "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரியாரோ?" அது போல, தமிழை விற்று வாங்கின சுயராஜ்ஜியத்தைத் தமிழர்களா அனுபவிக்கப் போகிறார்கள்? அந்த சுயராஜ்ஜியம் எதற்கு?

அன்னை உருக்குலைந்தாள்.

நாம் நமது தாய்மொழியை விழிப்புடன் போற்றாத காரணத் தால், அதன் புனிதத் தன்மை கெட்டுவிட்டது. தமிழ் இலக்கணத் துக்கும் பண்புக்கும் எவ்வாற்றானும் ஒவ்வாத அயல் மொழிச் சொற் கள் ஏராளமாக வந்து அதில் கலந்துவிட்டன. பட்டணத்துப் பால் காரர்கள் பாலில் தண்ணீரைக் கலப்பதில்லையா. தண்ணீரில்தான் பாலைக் கலப்பார்களாம். அதுபோல இக்காலத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களை அரிதின் முயன்று கல்லாத சிலபேர் "தமிழ் எழுத் தாளர்" என்று தம்மைச் சொல்லிக்கொண்டு எழுதும் விபரீத நடையை நீங்கள் பார்ப்பீர்களானால், அதில் எத்தனைத் தமிழ்ச் சொற்கள் இருக்கின்றனவென்று விரல்விட்டு எண்ணவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். ஒரு தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக அயல்மொழிச் சொல்லொன்று வழக்குப்பெற்றால், அத்தமிழ்ச்சொல் வழக்கற்றுப் போகுமென்று உணர்வதற்கு, மொழிநூற் புலமை

வேண்டியதில்லை, சாதாரண பகுத்தறிவு இருந்தால் போதும். இம் மாதிரி எத்தனையோ அழகான பொருட்செறிவுள்ள தமிழ்ச் சொற்கள் ஐயோ! இறந்துபோய்விட்டன. நம் உயிரை யெல்லாம் கொடுத்தாலும் அவைகளை நாம் மீண்டும் பெறமுடியாது. எடுத்துக் காட்டாக, அறவே வழக்கிறந்த சொற்களை விட்டுவிட்டு, இப்போது தான் வழக்கற்றுவரும் சில சொற்களைப் பார்க்கலாம். ஞாயிறு என்றால் எல்லார்க்கும் தெரியாது, சூரியன் என்றால்தான் தெரியும். திங்கள் என்றால் தெரியாது, சந்திரன் என்றால்தான் தெரியும். ஆண்டு என்றால் தெரியாது, வருஷம் என்றால்தான் தெரியும். திருமறைக்காடு அல்ல, வேதாரண்யம்தான். ஐயாறப்பன் அல்ல, பஞ்சநதீஸ்வரர்தான். பழமலை அல்ல, விருத்தாசலம்தான். பேறு அல்ல, பாக்கியம்தான். பொருட்செறிவு அல்ல, அர்த்த புஷ்டிதான். நோக்கு அல்ல, திருஷ்டிதான்--என்று இப்படியே எவ்வளவு வேண்டு மானாலும் அடுக்கிக் கொண்டு போகலாம்.

இம்மட்டுமன்றி, தமிழ்ப் பண்புக்கு எவ்வாற்றானும் ஒவ்வாத சொற்றொடர்கள் மேற்சொன்ன "எழுத்தாளர்"களால் தங்கு தடையன்றிக் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சில மாதிரி களைப் பாருங்கள் :— 'பெருமையடித்துக்கொள்ளுதல்,' 'என்ன ஸார்வாள், எங்கே போறயள்', ரொம்ப,' 'ஜிஞ்ஜாமிர்தமாக', 'எனக் குக் கொடுத்துவைக்கவில்லை', 'தொபுகடீரென்று', 'தூம்தடாகா,' 'கப்சிப்,' 'கப்ஸா,' 'கமலா'ஸ் காதல்', 'கச்சேரி or காலட்சேபம்', 'லேடீஸ் க்ளப்'—போதுமா, இன்னும் வேண்டுமா? "சிவ சிவா, போதும் போதும்" என்கிறீர்கள். சரி நிறுத்திவிட்டேன். இப்படித் தமிழன்னையைப் பையப் பையச் சாகவடிக்கும் இந்த "எழுத்தாளர்" கள்தான் உயிருள்ள தமிழ்நடை எழுதுபவர்களாகக் கருதப்படுகி றார்கள். இவர்கள் இந்தத் தமிழ்நடையைத் தமிழ் நாட்டில்மட்டும் பரப்பினால் போதாதென்று கருதி, உலகமெங்கும் பரப்புவதற்காக இவர்களுக்கு அகில இந்திய ரேடியோவில் பேசுவதற்கு அடிக்கடி இடம் கொடுக்கப்படுகிறது. இதற்கு மாறாக, வாழ்நாள் முழுதும் தமிழ் பயின்று இலக்கண இலக்கிய வரம்புகளுக்குட்பட்டு செந்தமிழ் நடை எழுதும் அறிஞர்கள் பத்தாம் பசலிக்காரர்களென்று பரிகசிக் கப்படுகிறார்கள். இவர்கள் தமிழைக் கொலைசெய்பவர்களாம். எப் படியிருக்கிறது சங்கதி? இதற்கு விமோசனம் இல்லையா? என்று தான் கேட்கிறேன். இந்த நிலைமையில்,

வேறு வந்து புகுந்தது. இவ்வளவு காலத்துக்குப் பிறகு, தமிழ் நாட்டுப் பாடசாலைகளில் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாயப் பாடமாக வைக்கக்கூடாதென்பதற்குரிய காரணங்களை நான் சொல்லிக் கொண்டுபோனால் கொல்லன் தெருவில் ஊசி விற்பதற்குச் சமானமாவதுமல்லாமல், என்னைப் பித்துப்பிடித்தவனென்றும் நீங்களெல்லாம் ஏசுவீர்கள். இந்தி எதிர்ப்புப் பேச்சைக் கேட்டுக் கேட்டுக் காதெல்லாம் சலித்துப்போய்விட்டது. நீங்கள் கேட்டு என்ன பயன்? அதைக் கேட்கவேண்டியவர்கள் அதைக் கேட்கக்கூடாதென்று காதைத்தான் பொத்திக்கொள்ளுகிறார்களே. அது நிற்க,

கட்டாய இந்தி நுழைவால் வடநாட்டாருடைய ஆதிக்கம் தென்னாட்டில் விரும்பத்தகாத அளவுக்கு அதிகரிக்கும், தமிழ் நாட்டார் தங்கள் நாட்டிலேயே அடிமைகளாகக் கருதப்படுவார்கள் என்னும் உண்மையைச் சொன்னால், மாகாணத் துவேஷக் குற்றம் நம்மீது சாட்டப்படுகிறது. நாம் ஏறக்குறைய 150 ஆண்டுகளாக ஆங்கிலம் பயின்றுவருகிறோம். இவ்வளவு காலத்துக்குப் பிறகும், நம்மில் ஆங்கிலத்தில் பெரிய பட்டம் பெற்ற ஒருவர் பேசுவது, கல்வியறிவில்லாத ஒரு சாமானியமான ஆங்கிலப் போர்வீரன் பேசுவதற்கு ஈடாகாதென்று கருதப்படுகிறது. ஒன்றரை நூற்றாண்டு ஆங்கிலப் பயிற்சிக்குப் பிறகும், நம் தென்னிந்தியாவில் ஒரு இராமசாமி முதலியாரோ, சண்முகம் செட்டியாரோ, சீனிவாச சாஸ்திரியாரோ, ராமலிங்க ரெட்டியாரோ, ராதாகிருஷ்ணனோ தான் நன்றாக ஆங்கிலம் பேசுபவர்களென்று புகழ்பெற்றிருக்கிறார்கள். அதுவும் நமது ஆசையினால்தான் நாம் அவர்களை நன்கு மதிக்கிறோம். நாம் மதிப்பதுபோல ஆங்கிலேயர்கள் இவர்களை மதிப்பதில்லை. இது இயற்கைதானே.

இதற்குச், சமீபத்தில் நடந்த நிகழ்ச்சியொன்றை எடுத்துக் காட்ட நீங்கள் எனக்கு அனுமதி தரல் வேண்டும். சில ஆண்டுகளுக்குமுன் சென்னைப் பல்கலைக்கழக பி.ஏ. தேர்வுக்கு ஸர். ராதாகிருஷ்ணன் இயற்றிய "இந்துஸ்தானத்தின் இதயம் (The Heart of Hindustan)" என்னும் நூலை ஆங்கிலப் பாடமாக வைக்க வேண்டுமென்று பிரேரேபிக்கப்பட்டது. அந்நூலின் ஆங்கில நடை

பிழைபாடுடையதாகையால் அதைப் பாடமாக வைக்கக்கூடா தென்று ஒரு வெள்ளைக்காரர் சொன்னார். இதன் முடிவை நீங்களே உய்த்துணர்ந்துகொள்ளுமாறு விட்டுவிடுகிறேன்.

ஒரு வெள்ளைக்காரனோ வடநாட்டானோ தெலுங்கனோ எவ்வளவு தான் தமிழில் வல்லவனாயிருந்தபோதிலும், அவன் தமிழ் பேசும் போது நாம் சிரிக்கத்தானே செய்கிறோம். அதுபோல, இந்திமொழி இப்போது தென்னாட்டில் கட்டாயப் பாடமாகி, பிறகு அரசாங்க மொழியாய்விட்டால், நாம் எவ்வளவு அரிதின் முயன்று அம் மொழியைக் கற்றாலும், அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள வடநாட்டாருடைய புலமையை நாம் அடையமுடியாது. அவர்கள் மொழி சிறக்கவே, அவர்களும் எல்லாவற்றிலும் சிறப்படைவார்கள். பிறகு நாம் அவர்களுக்கு அடிமையாவதில் என்ன தடை இருக் கிறது? இச்சிறிய உண்மை நமது அரசாங்கத்தினருக்குப் புலப் படாமற் போனதுதான் விந்தையினும் விந்தை!

எடுத்துக்காட்டாக, ஒன்று பாருங்கள். வடநாட்டிலே தயாரிக் கப்படும் இந்திபேசும் படங்கள் ஏராளமாகத் தமிழ்நாட்டில் காண் பிக்கப்படுவதால், தமிழ்நாட்டாருக்கு அவைகளின்மேல் மோகம் அளவில்லாததாயிருக்கிறது. இந்த நிலைமையில், புகழ்பெற்ற பிரபாத் கம்பெனியின் நக்ஷத்திர நடிகையான திரு சாந்தா ஆப்டே இரண்டு வாரங்களுக்குமுன் சென்னைக்கு வந்தார். சென்னைவாசிகள் அவருக்கு அமோகமான வரவேற்பளித்தார்கள். திரள் திரளாகக் கூடி அவரைப் பார்க்கச் சென்றார்கள். இதைக்கண்டு நான் பொறு மைப்படவில்லை. சாந்தாவின் நடிப்பின் திறமையையும் இசையின் இனிமையையும் மெச்சுவதில் நான் யாருக்கும் பிற்பட்டவளல்ல. எனினும் வடநாட்டார் இங்கேவந்து சிறப்படைவதுபோல, தமிழ் நாட்டு நடிகர்கள் வடநாட்டுக்குச் சென்று இதுவரையில் சிறப்படைந் தார்களென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? மேற்கண்ட காரணங்களுக்காக நாம் கட்டாய இந்தியை எதிர்க்கிறோமே தவிர

இந்திக்கு நாம் அஞ்சவில்லை.

நாம் ஏன் அதற்கு அஞ்சவேண்டும்? அதுவும் ஒரு மக்கள் தொகுதியினர் பேசும் மொழிதானே. அதை நாம் ஏன் வெறுக்க

வேண்டும்? ஆமாம் சகோதரிகளே, சற்றுமுன் அதைச் சனியன் என்று சொன்னது எனக்கு நினைவிலிருக்கிறது. ஒரு வெள்ளிக் கொலுசு தன்வரையில் அழகானதுதான், உபயோகமும் உள்ளது தான். ஆனால், ஓர் அழகிய அரசியின் காலில் தஞ்சம் புகவேண்டிய அந்த வெள்ளிக்கொலுசு மணிகள் இழைத்த முடி இருக்கும் அவள் தலையில் இருக்க ஆசைகொண்டால், அது அவளுக்குச் சனியனாகத் தானே முடியும்? அவள் அதைக் கீழே தள்ள முயலுவாளல்லவா? அதுபோல இந்தி அதற்குரிய இடத்திலிருந்தால் அதைப்பற்றி நாம் கவலைப்படப்போவதில்லை. நமது தாய்மொழிக்குரிய இடத்தில் அது வலுக்கட்டாயமாக வந்து புகுவதால்தான் நாம் அதை வெறுக்கி றோம். தமிழ்நாட்டில், விருப்பமுள்ளவர்கள் அதைப் படிப்பதில் எனக்கொன்றும் தடையில்லை. இதுதான் என் கருத்து என்பதை, என்னால் எழுதப்பட்டு "விடுதலைப்" பத்திரிகையின் நான்கு தொடர்ச்சியான இதழ்களில் வெளிவந்த "புனிதவதி அல்லது தமிழர் விடுதலைப் போர்" என்னும் சிறு கதையிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ளலாம். அக்கதையில், புனிதவதியும் அவள் கணவ னும் பிறர் தூண்டுதலின்றித் தாங்களே இந்தி படித்துப் பரீட்சையில் தேறுகிறார்கள். புனிதவதி தன்னுடைய திறமைக்காகத் தங்கப் பதக்கமும் பரிசு பெறுகிறாள். 18 மொழிகளில் வல்லுநராயிருந்த காலஞ்சென்ற எல். டி. சாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் தமிழர்தானே. மேலும் ஏறக்குறைய 13 மொழிகளில் புலமைபெற்று, இன்னும் தாம் தேறுவதற்குப் பரீட்சைகள் இல்லையே என்று ஏங்கிக்கிடக்கும் திருவாளர் வித்துவான் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M.A., B.L., M.O.L., Dip. Econ. .... (இன்னும் என்னென்னவோ அவைகளைத் தெரிந்தவர்கள் நிரப்பிக்கொள்வதற்காகப் பின்னால் இடம் விடப்பட்டிருக்கிறது) அவர்கள் ஒரு தமிழ் மகனல்லவா? அன்றியும், வடமொழித் தென்மொழிக் கடல்களை ஒருங்கே கரை கண்டுணர்ந்த மறைமலையடிகள், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள், பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், சுவாமி சகஜா னந்தம் முதலியவர்களெல்லாம் தமிழர்கள்தானே. இத்தகைய தமி ழர் குலத்தைச் சேர்ந்த நாம் ஏன் இந்திமொழிக்காதல் வேறெதற் காதல் அஞ்சவேண்டும்? அதைக் கட்டாயப் பாடமாக வைக்கக் கூடாதென்பதுதானே நமது வேண்டுகோள்?

அபாய அறிவிப்பு.

நமது பேருறக்கத்தின் ஒரு விபரீத பயனைப் பாருங்கள் சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகமென்றுதானே நினைத்திருந்தீர்கள். அதுதான் இல்லை! இதுவரையில் அப்படித்தான் ஏமாந்துபோனீர்கள். அது தமிழ்ப் பல்கலைக் கழகமல்லவென்று மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரவர்கள் அறுதியிட்டுக் கூறிவிட்டார். தமிழ்ப் பெண்மணிகளே! செந்தமிழ் நாட்டின் நாப்பண் ஒரு தமிழன் தமிழர்களுக்காகக் கண்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழர்களுக்குத் தமிழில் பேச உரிமையில்லையென்று மறுக்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமல்லவென்றால், அது ஏன் அவ்வளவு பெரும்பொருள் செலவில் ஆரம்பித்து நடத்தப்படுகிறதென்றுதான். நான் கேட்கிறேன். சென்னை பல்கலைக் கழகம் ஒன்று போதாதா? நாம் உடனே விழித்தெழுந்து ஆவன செய்யாவிட்டால், வெகு விரைவில் நம்மை விழுங்கவிருக்கும் பேராபத்துக்கு இது ஒரு அறிவிப்பாகுமென்று நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். சென்ற ஆண்டில், கவி ரவீந்திரநாத தாகூர் வங்காளப் பல்கலைக்கழகப் பட்டமளிப்புவிழாவில் வங்காளமொழியில் சொற்பொழிவு நிகழ்த்தினதுபோல, வெகு விரைவில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவிலாதல் தமிழில் சொற்பொழிவு நிகழ்த்தப்படுமென்று ஆசைகொண்டிருந்தேன். அவ்வாசை நிறைவேறுங்காலம் சேய்மையில் போய்க்கொண்டிருக்கிறதோ! அல்லது நிறைவேறாமலே தான் போய்விடுமோ! அறியேன்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க."

தமிழ்மக்கள் என்றைக்கேனும் நல்லுணர்ச்சி பெறுவார்களா என்று நான் மேற்காட்டியபடி ஏக்கமுறுங் காலத்தில் மாரிக்காலத்து மறைநிலாப்போதில் திண்ணிய இருள் பிழம்பைக் கிழித்துக்கொண்டு ஒரு மின்னொளி தோன்றி ஒரு கணம் நின்று மறைவதுபோல, சென்னை, திருச்சினப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள நகரசபைத் தேர்தல்களின் முடிவுகள் வெளிவந்தன. இந்தத் தேர்தல்கள் கட்டாய இந்தியையே பிரசினையாக வைத்து நடத்தப்பட்டன வென்பதில் ஐயமில்லை. இதுகாறும் எந்தத் தேர்தலிலும் வெற்றி முழக்கத்துடன்

வெளிவந்த காங்கிரஸ் இப்போதுமட்டும் படுதோல்வி யடைவானேன்? காங்கிரஸின்மீது பொதுமக்களுக்கு ஒருவித வெறுப்பும் இல்லை. இந்திய மக்களை முழு விடுதலை யடைவிக்கும் ஒப்பற்ற தனிப் பெரும் நிலையம் காங்கிரஸ்தான் என்பதை மக்கள் இன்னும் நம்புகிறார்கள். யானும் அவ்வாறே. ஆனால் சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் அரசாங்கத்தார் கொண்டுவந்த கட்டாய இந்தியைத்தான் அவர்கள் வெறுக்கிறார்கள். இந்த அற்ப காரணத்துக்காகக் காங்கிரஸ் பற்றுடைய பலர் அதனினின்றும் வெளியேறிவிட்டார்கள். தமிழ் இந்திப் பிரசினையைப்பற்றிக் கவலை கொள்ளாத பல உண்மைக் காங்கிரஸ்வாதிகள் "வேற்றுமை யுணர்ச்சி விளைவிக்கும் அம்சங்களை யெல்லாம் நீக்கி, காங்கிரஸ் பேரால் மக்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய இக்காலத்தில், ஏனோ இச்சென்னை அரசாங்கம் பாழாய்ப் போன இந்தியைப் புகுத்தி நாட்டில் பிளவு உண்டாக்குகிறார்கள்?" என்று அலமருகிறார்கள்.

ஆனால், இவ்வுண்மையைக் காங்கிரஸ் அரசாங்கத்தினரின் தயவை அண்டிப் பிழைக்கும் சில பத்திரிகைகளும் நபர்களும் மறைக்க முயற்சி செய்கிறார்கள். இம்முயற்சியில் அவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்களே யொழியப் பிறிதில்லை. இவர்களது செய்கையை, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயல்பவனது செய்கைக்கு ஒப்பிட்டு எள்ளி நகையாடற்பாலதாகும். இவர்களது நிலைக்கிரங்கி,

"வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்"

என்னும் பொய்யா மொழியை இவர்களுக்கு எடுத்துக்காட்டுவதன்றி வேறென்செய மாட்டுவன்? காங்கிரஸாகிய கட்டடத்தைத் தாங்கி நிற்கும் முதன்மையான தூண் அசைந்துகொடுக்கிறதென்று தெரிந்திருந்தும், அதை மறைத்து அது நல்ல நிலைமையி லிருக்கிறதென்று பிறரை நம்பச்செய்யும் இவர்களது பொய்யொழுக்கம் காங்கிரஸுக்கே துரோகம் செய்வதாகும். இந்த நிலைமையில் காங்கிரஸ் அரசாங்கத்தார் உடனே செய்யத்தக்கது

"எவர் உறவர் எவர் பகைஞர்"

என்பதை ஆராய்வதுதான். பொழுது விடிந்தால் பொழுது போனால் தாங்கள் செய்வதெல்லாம் சரியென்று தாளம்போட்டு

வயிற்றைக் கழுவிக்கொள்ளப் பார்க்கும் போலிக் காங்கிரஸ்காரர்களையும் பத்திரிகைகளையும் நம்பப்போகிறார்களா? அன்றி,

"நகுதற்பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற்பொருட்டு"

என்னும் உண்மையைக் கடைப்பிடித்து நல்ல எண்ணத்துடன் காங்கிரஸைச் சீர்திருத்த முயல்பவர்களை நம்பப்போகிறார்களா? அவர்கள் எது செய்யினும் செய்க. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். காங்கிரஸ் ஆதிக்கம் தமிழ்நாட்டில் நிலைபெறவேண்டுமானால், கட்டாய இந்தி உடனே எடுபடல் வேண்டும்.

கேட்கும் காதைத் திருப்பலாகாதா?

நமது மகாணத்தின் காங்கிரஸ் அரசாங்கத்தின் முதலமைச்சர் திருவாளர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் எனக்கு நேரில் அறிமுகமில்லையாயினும், அவரது வாழ்க்கை வரலாற்றைப் பின்பற்றிவந்த எனக்கு அவரிடம் தனிமதிப்பு உண்டு. அவர் ஒரு கர்மவீரர் என்பது எனது கொள்கை. அவரைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற கப்பல் போர் வீரராயிருந்த நெல்ஸன் பிரபுவின்மீது என் கருத்து செல்லும். நெல்ஸனுக்கு ஒரு கண் குருடு. ஒரு சமயம் கடலில் கப்பல் போர் நடந்துகொண்டிருக்கையில், நெல்ஸனின் மேலதிகாரி சேய்மையில் ஏதோவொன்றைக் காட்டி ஒரு காரியத்தைச் செய்யும்படி நெல்ஸனுக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளை மூடத்தனமானதென்றும், அதை நிறைவேற்றினால் தன் பக்கம் கட்டாயம் தோல்வி யடையுமென்றும் நெல்ஸன் கண்டறிந்தான். உடனே தொலைநோக்கு ஆடியைத் தன் குருட்டுக் கண்ணில் வைத்துப் பார்த்து, தனக்கு ஒன்றும் புலப்படவில்லையென்று சொல்லி, தன் விருப்பப்படிப் போர்நிகழ்த்தி வெற்றிபெற்றான். அன்னைமீர்! தனக்குள்ள உறுப்புக் குறைவையும் தனது நன்மைக்காகப் பயன்படுத்திக்கொண்ட நெல்ஸனின் அறிவின் மேன்மை வியத்தற்குரியதல்லவா?

அதுபோல, நமது முதலமைச்சருக்கு ஒரு காது தொழிற்படுவதில்லையாம். சாதாரண ஒரு மகனாயிருந்தால், அவ்வுறுப்புக் குறைவை நினைந்து அழுவான். நமது முதலமைச்சரோ வென்னின், அக்குறை

வைத் தனது நன்மைக்குப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார். விரும்பத்தகாதவற்றை எவரேனும் சொல்லுவார்களென்று அவர் ஐயுற்றால், அவர் பக்கம் தமது கேட்காத காதைத் திருப்பிவிட்டு, அச்சொற்களினால் பாதிக்கப்படாமல் நிம்மதியாயிருப்பாராம். ஆனால், நாம் நம்முடைய குறைகளைச் சொல்லும்போதும் அவர் அதே முறையை அனுசரிக்கிறாரென்று நினைக்கும்போதுதான் எனக்குத் தீராக் கவலையாயிருக்கிறது. நாம் சொல்வனவற்றிற்குத் தமது கேட்கும் காதைத் திருப்பினால், அவருக்கும் நன்மையுண்டு, தமிழ் நாட்டுக்கும் நன்மையுண்டு, காங்கிரஸுக்கும் நன்மையுண்டு என்பதை அவருக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆசை வெட்கமறியாது.

செந்தமிழ் நாட்டு நந்தா விளக்கனையீர்! நமது தீவினை நம்மை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது பாருங்கள். நாம் இதுகாறும் நமது உடன்பிறப்பாளரென்று கருதிவந்த ஆந்திர சோதருலாரு "மேமு உங்களுடன் வாழமாட்டோம். பிரிந்துதான் போதுமு" என்று தம் தம் என்று குதிக்கிறார்கள். நாம் அவர்களுக்கு என்ன குற்றம் செய்துவிட்டோமென்று திகைப்படைகிறோம். நாம் அவர்களை இதுகாறும் வேறாக நினைத்ததில்லை. நமது விரிந்த மனப்பான்மையினால் நமது இசைக்கலையினையே அவர்களுக்குப் பறிகொடுத்துவிட்டு, அவர்களுடைய இசையை நம்முடையதாகக் கொண்டு வாழ்ந்துவந்தோம். செந்தமிழ்நாட்டில் நடக்கும் இசையரங்குகளில், முழுக்க முழுக்க தியாகையர் இயற்றிய தெலுங்கு கீர்த்தனங்கள் பாடப்படும் வெட்கக்கேடு வேறெந்த நாட்டில் நடக்கும், அல்லது அடுக்கும், சொல்லுங்கள் பார்க்கலாம். இதுகாரணமாகத் தனித்தமிழிசைக்கலை மாண்டுபோய்விட்டது. தேவார திருவாசகங்கள் மறக்கப்பட்டன. தேவார திருவாசகங்களால் சிறப்படைந்த கோயில்களில் அவைகள் இடம்பெறாமல் பிறநாட்டு மொழிகள் ஆதிக்கம் பெறலாயின. தனித் தமிழ்ப் பண்கள் வழக்கற்றுப்போயின. கரகரப்ரியா, கதன குதூகலம், இந்துஸ்தான் காபி, 'சுனோ சுனோ' மெட்டு என்றால்தான் உங்களுக்குத் தெரியும். கொல்லிக்கௌவாணம், தக்கேசி, பழம்பஞ்சுரம் என்றால் உங்களுக்குத் தெரியாது. மதுரைச் சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரனுக்காக விறகுவிற்பவராகி ஏமநாதனிடம் பாடிய சாதாரிப் பண்ணை யாரா

வது பாடக்கேட்க நீங்கள் ஆசைப் பட்டீர்களானால் அவ்வாசை நிராசைதான். திருவீழிமிழலையில் வண்டுகளும் செவ்வழி என்னும் நல்ல பண் பாடுமென்று திருஞானசம்பந்தர் அவ்வூர்ப் பதிகத்தில் அருளிச்செய்தார். அவ்வண்டுகள் செய்த புண்ணியம் நாம் செய்ய வில்லை. தாய்மார்களே! தேவாரத்துக்குப் பண் வகுத்தவள் ஓரிளம் பெண் என்பதை நினைக்கும்போது, நாமெல்லாம் அவளுடைய சந் ததியார்களென்று சொல்லிக்கொள்ள நமக்கு வெட்கமில்லையா? என்றுதான் கேட்கிறேன்.

“ஆகா! ஆந்திரர்கள் நன்றாய்ப் போகட்டும், உடனே பிரிந்து போகட்டும்” என்று சொல்லுகிறீர்களல்லவா? நானும் அதையே தான் சொல்லுகிறேன். அதனால் நமக்குக் கேடு ஒன்றும் இல்லை, ஆக்கந்தான். முதலில் நமது இசைக்கலை அவர்களது பிசாசுப் பிடியி னின்றும் விடுதலையடையும்.

ஆனால் போகிறவர்கள்தான் போகிறார்களே, சும்மா போகிறார் களாவென்றால், அதுதான் கிடையாது. தமிழர்கள் சப்பாணிகள் என்பதை நன்றாய்த் தெரிந்துகொண்டு அடிமடியில் கைபோட வரு கிறார்கள். சென்னபட்டணம் ஆந்திர மாகாணத்தின் தலைநகரமாம். இதற்கு அவர்கள் கூறும் காரணங்கள்தான் விசித்திரமானவை. சென்னையை முதன் முதலில் தெலுங்கு அரசர்கள்தான் வெள்ளைக் காரர்களிடம் ஒப்படைக்கும் புண்ணியத்தைச் செய்தார்களாம் தலை குனியவைக்கும் இச்செய்தியை அவர்கள் மிகவும் பெருமையா கப் பேசிக்கொள்கிறார்கள். ஆமாம், ஆசை வெட்கமறியாதல் லவா? தெலுங்கு அரசராகிய கிருஷ்ணதேவராயரின் பிரதிநிதி யாகத் திருமலைநாயகர் மதுரையை ஆண்டதால், மதுரை ஆந்திர மகாணத்தைச சேர்ந்ததென்று நாளைக்கு அவர்கள் சொல்லலாம் மேலும், தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருவையாற்றில் தெலுங்கு கீர்த்தனங்கள் பாடிய தியாகராஜர் பிறந்ததால் தஞ்சாவூர் முழுவ தும் அவர்களுடையது என்று சொன்னால் நாம் வியப்படைவதற் கில்லை. ஒரு மாஜி நீதிபதியும், புகழ் வாய்ந்த ஒரு தத்துவ நூலாசிரியரும், கீர்த்திபெற்ற ஒரு நியாயவாதியும் இந்த ஆந்திரர்க ளோடு கலந்து அவர்கள் போட்ட கூச்சலுக்கு இணங்கி நின்றதை நினைக்கும்போது தான் நமக்குச் சிரிப்பு சிரிப்பாய் வருகிறது.

தமிழர்களே! சிரித்தது போதும். இனி நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நீங்கள் இருக்கும் இடத்துக்குக்கூடப் பஞ்சம் வந்துவிட்டது. திருநாவுக்கரசராலும் சுந்தரமூர்த்திகளாலும் பாடப்பெற்ற திருவொற்றியூரும், திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற மயிலாப்பூரும் இரு கண்கள்போல் விளங்க, திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்ற திருவல்லிக்கேணி திலகமாய் ஒளிவீச, இராமலிங்க அடிகளால் பாடப்பெற்ற கந்தகோட்டம் இதயமாய்த் துடிக்க அமைந்துள்ள இந்த சென்னைமாநகரம் உங்களுடையதல்லவென்று மறுக்கப்படுகிறது. ஆகவே அன்பர்களே, விழித்தெழுங்கள்! 2000 ஆண்டுகளுக்குமுன்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு"

என்று பாடிய இளங்கோவடிகளையும், சில ஆண்டுகளுக்குமுன்,

"நீலத்திரைக் கடலோரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு"

என்று பாடிய கவி சுப்பிரமணிய பாரதியாரையும் பின்பற்றி, தமிழ் மாகாணத்துக்காக இடைவிடாது கிளர்ச்சி செய்யுங்கள். தமிழ்நாடு தமிழருக்கே என ஆர்ப்பரியுங்கள். தாய்மார்களே! நீங்கள் அழுத பிள்ளைக்குத்தானே பால் கொடுக்கிறீர்கள்? அதுபோல, நாம் கூச்சலிட்டால்தான் நமது தேவைகள் நிறைவேற்றப்படும்.

தமிழ்ப் பெண் குலம்.

அன்னைமீர்! நீங்கள் யார்? வாழையடி வாழையாக வந்த எந்தத் திருக்கூட்டத்தை நீங்கள் சேர்ந்தவர்கள்? என்பவைகளைப்பற்றி இங்கே சிறிது சொல்லுவது பொருத்தமற்றதாயிராதென்று நினைக்கிறேன்.

"பெண்கள் சுதந்திரர்களல்ல, எக்காலத்திலும் அவர்கள் பரதந்திரர்கள்தான். ஆகவே, துறவு நெறியிற் செல்ல அவர்களுக்குத் தகுதியில்லை" என்னும் பிறநாட்டு நூலோரின் கொள்கையைப் பொய்ப்படுத்தி, தனது கட்டிளங் கன்னிப் பருவத்தில் ஓர் அரச

குமாரனுடைய உண்மைக் காதலையும் அற்பமென உதறித் தள்ளி, துறவு நெறி மேற்கொண்டு உலகத்துக்கு வழிகாட்டிய மணிமேகலை உங்கள் இனத்தைச் சேர்ந்தவளே.

தனது கற்பொழுக்கத்தினாலும் சிவபக்தியினாலும் உயர்ந்த சீலத்தினாலும் தனது கணவனே தன்னைத் தெய்வமாக வணங்கும்படிச்செய்து, வேறெந்த மொழியிலும் காணமுடியாத உயர்ந்த தத்துவக் கருத்துக்களடங்கிய அற்புதமான "அற்புதத் திருவந்தாதி" முதலிய விழுமிய நூல்களை அருளிய காரைக்காலம்மையார் என்னும் புனிதவதியார் ஒரு தமிழ்ப் பெண்தான்.

விரும்பத்தகாத நெறியிற் சென்ற ஓரரசனையும் அவனது நாட்டையும் ஒரு பெண் தன் மனவுறுதியினால் தன் வழிக்குத் திருப்பக்கூடுமென்பதை மங்கையர்க்கரசியார் எண்பித்துக்காட்டிவிட்டார். அம் மாதரசி திருஞானசம்பந்தரைக்கொண்டு சமண சமயத்தை ஒடுக்கியது சரியா, அல்லவா என்பது இப்போது விவாதிக்கப்படவேண்டிய விஷயமல்ல. அது வேறு விஷயம். ஒரு பெண் மனம் வைத்தால் எக்காரியத்தையும் சாதிக்கமுடியும் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே இதை எடுத்துக்காட்டினேன்.

மங்கையர்க்கரசியாரோடு சமகாலத்தவராயிருந்த திலகவதியாரைப்பற்றித் தமிழ்ப்பெண்களாகிய உங்களுக்கு நான் எடுத்துச் சொல்வது மிகையாகும். அவர் தமது தவ வலிமையினால் வேற்றுச் சமயம் புக்கிருந்த தமது தம்பியைத் தம்வழித்திருப்பி ஆட்கொண்டார். அவரில்லாவிட்டால் திருநாவுக்கரசருடைய புகழ் எது? சைவத் திருமுறைகளில் மூன்றை நாம் பார்த்திருக்க முடியுமா?

"Plain living and high thinking" என்னும் ஆங்கிலப் பழமொழிக்கேற்ப, எளிய வாழ்வு வாழ்ந்து உயர்ந்த குறிக்கோள்களைத் தாங்கித் தமிழ்நாடெங்கும் தமது புகழ் பரப்பிய அவ்வையார் தமிழ்த் தாயின் தவப்பெரும் புதல்வியாவர். இவறியற்றிய சுலபமான நீதி நூல்களுக்கு இணையாகச் சொல்லக்கூடிய இலக்கியம் வேறெந்த மொழியிலும் இல்லை.

"பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு வீடுபேறில்லை, அவர்கள் எப்போதாகிலும் ஆணாய்ப் பிறந்துதான் முத்தியடைய வேண்டும்.

பெண்கள் பிறவியிலேயே மாசுடையவர்கள்" என்னும் பிறநாட்டு நூலோருடைய கொள்கையைத் தவிடுபொடியாக்கி, திருமாலையே தனக்குக் கணவனாக வரித்து, "திருப்பாவை" முதலிய விழுமிய பாமாலைகளை இயற்றி, உடம்புடனேயே வீடுபேறெய்திய ஆண்டாள் உங்கள் குலத்தவள்தான்.

மற்றும், எங்கேயோ போர் முரசு முழங்குவதைக் கேட்டு மகிழ்ந்து, இதற்குமுன் அதேபோரில் தனது தந்தையும் கணவனும் தமையனும் நாளுக்கொருவராக மடிந்திருக்கவும், தனக்குள்ள ஒரே யொரு மகனுக்கு எண்ணெய் தடவித் தலைவாரி, வெண்மையான ஆடை உடுத்தி அவன்கையில் வேல் கொடுத்து "போருக்குப் போய் வா" என்று மலர்ந்த முகத்துடன் அனுப்பிய ஒரு தமிழ்ப் பெண்ணைப் பற்றியும், தனது மகன் அன்று நடந்த போரில் புறமுதுகிட்டோடினன் என்று சிலர் சொல்லக் கேட்டு நிலைகுலைந்து, "அப்படியானால், அவனுக்குப் பாலூட்டிய இம்முலையை அறுப்பேன்" என்று சினந்து வாளேந்திய கையளாய்ப் போர்க்களம் சென்று பார்க்கையில், அங்கே தனது மகன் மார்பகத்தில் புண்ணுடன் இறந்து வீழ்ந்து கிடப்பதைக் கண்டு, அவனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பன்மடங்கு அதிக மகிழ்ச்சியையடைந்த ஒரு பெண்ணைப்பற்றியும் இன்னும் பல வீரத் தமிழ்த் தாயர்களைப்பற்றியும் நீங்கள் புறநானூறு முதலிய சங்க நூல்களில் தெரிந்துகொள்கிறீர்கள்.

அன்னைமீர்! உங்கள் குலத்து முன்னோர்களைப் பற்றி நான் சிறிது சொன்ன அளவிலேயே, உங்கள் முகத்திலுள்ள சோர்வு நீங்குவதை நான் பார்க்கிறேன். அதற்குப் பதிலாக வீரக்களை தோன்றுகிறது. அன்றொருநாள் நமது குலத் தலைவியாகிய கண்ணகி என்னும் வீரமாது, தனது கணவனைக் கள்வனென்று பாண்டியன் ஒறுத்தானென்னும் செய்தியைக் கேட்டுப் பொங்கி எழுந்தாள் "சான்றோரும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல்" என்று அரற்றினாள். அவள் பொங்கி எழுந்ததன் பயன் என்னவாயிற்றென்று உங்களுக்குத் தெரியும்.

அதுபோல, இந்த நாட்டில், "சான்றோரும் உண்டுகொல், தெய்வமும் உண்டுகொல்" என்று கண்ணகியைப்போல நாமும் அரற்ற

வேண்டிய காலம் வந்துவிட்டது. இன்று நமது தமிழ்த்தாய்க்குத் தீங்கு செய்யப்படுகிறது. எனவே, தமிழ்ப் பெண் குலத்துக்கே கேடு சூழப்படுகிறது. இது கண்டு பொறுது நீங்கள் சீறி எழுந்தால்........
....

என் அருமைச் சகோதரிகளே! நான் நெடுநேரம் பேசி உங்கள் பொன்போன்ற காலத்தைக் கவர்ந்துவிட்டேன் மன்னிக்க. இவ்வளவு நான் பேசினது எனது ஆர்வத்தினாலேயே யன்றி எனது கல்வியறிவாற்றல்களாலன்று. இனிமேல் நடக்க வேண்டிய வேலைகள் பலவுள. நீங்கள் ஆலோசித்து நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் பல இருக்கின்றன. தமிழ்த்தாயின் தவப் புதல்வராகிய மறைமலையடிகளாரின் திருமகள் திருவரங்க நீலாம்பிகை யம்மையாரின் தலைமையுரையைக் கேட்க நீங்கள் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறீர்கள். யானும் அவ்வாறே. அவ்வின்பத்தை நீங்கள் நுகர்வதற்கு நான் ஏன் இடையூறாய் நிற்கவேண்டும்? இதுகாறும் என் சிற்றுரையைப் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். தமிழ்நாட்டில் இன்று தோன்றியுள்ள புத்துணர்ச்சி உருவம் பெற்று வந்தாலென்ன விளங்கும் தமிழ்ப் பாவலர் புதுவை பாரதிதாசனது அழகிய பாட்டு ஒன்றின் மூலமாய் உங்களை மீண்டும் ஒருமுறை வரவேற்று என்பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன் :

> " இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
> **எல்லோரும் வாருங்கள் நாட்டினரே !**
> செந்தமிழ்க்குத் தீமை வந்த பின்னும்—இந்த
> தேகம் இருந்தொரு லாபமுண்டோ ?"

S. S. PRESS, No. 1/6 Davidson St., Madras.